©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 154A] சென்னை, வியாழக்கிழமை, ஜூன் 25, 2009
ஆனி 11, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2009**

**1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 22/1959.

34–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 34–B எனும் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் ''குத்தகைத் தொகையைச் செலுத்தாததன் பேரில்'' என்னும் சொற்றொடருக்கு பின்னர் ''அல்லது குத்தகை உடன்பாட்டில் விதிக்கப்பட்ட வரையறைகள் எவற்றையேனும் மீறுவதன் பேரில்'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

114–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 114–A எனும் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவில், ''47ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (a) எனும் கூறின் (iii) ஆம் இனத்தின்படி அல்லது (a) எனும் கூறுக்கான இரண்டாம் வரம்புரையின்படி அல்லது 49 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையின்படி'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''இந்தச் சட்டத்தின்படி'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

1959—ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34—B எனும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களின் குத்தகையைப் பொறுத்த அளவில் குத்தகைத் தொகையைச் செலுத்தாததன் பேரில் மட்டுமே அத்தகைய குத்தகையை முடிவுக்குக்கொண்டுவர வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்தகால அனுபவத்தின் வாயிலாக, குத்தகை உடன்பாட்டில் உட்படுத்தப்படும் குத்தகைத் தொகையைச் செலுத்தவில்லை என்ற காரணம் நீங்கலாக, குத்தகை உடன்பாட்டில் விதிக்கப்பட்ட வரையறைகளில் ஏதொன்றையும் மீறியதற்காக எனக் காரணம் காட்டி அத்தகைய குத்தகையை முடிவுக்கு கொண்டுவர செயல் அலுவலர்களால் இயலவில்லை எனத் தெரிகிறது. எனவே, குத்தகை உடன்பாட்டில் செய்துகொள்ளும் வரையறைகள் ஏதொன்றையும் மீறியதற்காகவும்கூட அசையாச் சொத்தின் குத்தகையை முடிவுக்கு கொண்டு வரலாம் எனக் கருதப்படுகிறது. அரசானது மேற்சொன்ன சட்டத்தின் பல்வேறு வகைமுறைகளின்படி ஆணைகள் பிறப்பிக்க அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்சொன்ன சட்டத்தின் 114—A எனும் பிரிவின்படி அரசானது தானாகவே முற்பட்டோ அல்லது 47 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (a) எனும் கூறின் (iii) ஆம் இனத்தின்படி அல்லது (a) எனும் கூறுக்கான இரண்டாம் வரம்புரையின்படி அல்லது 49 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையின்படி அரசின் ஆணையொன்றினால், பாதிக்கப்பட்ட நபரெவரின் விண்ணப்பத்தின் பேரிலோ அத்தகைய ஆணை எதனையும் சீராய்வு செய்யலாம். எனவே, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எவற்றின்படியும் பிறப்பிக்கப்படும் ஆணை எதனையும் சீராய்வு செய்வதற்கு அரசினை இயல்விக்கும் வகையில் மேற்சொன்ன 114—A எனும் பிரிவைத் திருத்துவது உகந்ததெனக் கருதப்படுகிறது. எனவே, அரசானது கருதப்படும் நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தினைத் தக்கவாறு திருத்துவதென முடிவுசெய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.ஆர். பெரியகருப்பன்,**
*இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.